எனது இலக்கம்: DSP./V8 /dri. பலநோக்கு அ.உதவியாளர்களின் இ.சே.ஆட்சேர்ப்பு
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2023.10.09

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்

**<u>பலநோக்கு அபிவிருத்திச் செயலாற்றுகைச் செயலணித் திணைக்களத்தின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பலநோக்கு அபிவிருத்தி உதவியாளர்களுக்கு அவி/23/0160/605/012 ஆம் இலக்க 2023.02.07 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க இணைந்த சாரதிகள் சேவையில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு தகவல்களைப் பெறுதல்</u>**

22/1353/605/011 ஆம் இலக்க 2022.09.12 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க அரச சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட 2022.12.30 ஆம் திகதிய மூன்றாவது இடைக்கால அறிக்கையிலுள்ள சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்பட்டுள்ள அவி/23/0160/605/012 ஆம் இலக்க 2023.02.07 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் PSC/EST/03-01-01/01/2022 ஆம் இலக்க 2023.09.27 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்ட அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதி என்பவற்றின் அடிப்படையில் பலநோக்கு அபிவிருத்திச் செயலாற்றுகைச் செயலணித் திணைக்களத்தின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள பயிற்சி பெற்ற பலநோக்கு அபிவிருத்திப் பணி உதவியாளர்களை, இணைந்த சேவையின் கீழுள்ள சாரதிகள் சேவையிலுள்ள பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், அவ்வாறு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு பின்வரும் விதத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

I. உங்கள் அமைச்சில்/ திணைக்களத்தில் உள்ள இணைந்த சேவையின் கீழான சாரதிகள் சேவையிலுள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு, அரசாங்க சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவின் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.
2023.06.30 ஆம் திகதியின் பின்னரான காலப் பகுதிக்கு முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தினால் இந்த அனுமதி வழக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

II. சேவைகளுக்கான தேவை மற்றும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்குப் போதுமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக குறித்த திணைக்களத் தலைவர்கள் திருப்தியடைந்த பின்னர் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள வேண்டும்.

III. அனைத்து ஆட்சேர்ப்புக்களும் 2022.12.31 ஆம் திகதியில் அனுமதிக்கப்பட்டவாறான பதவியணி வரையறைக்குள் அமைதல் வேண்டும்.

IV. **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்**

ஏற்கனவே சாரதிகளாகப் பயிற்சி பெற்று வரும் / பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்ட பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றுகை உதவியாளர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் மட்டும் மட்டுப்படுத்தப்படும் விதமாக இந்த ஆட்சேர்ப்பு இடம்பெற வேண்டும் என்றும், அது வருங்காலத்தில் முன்னுதாரணமாக இருக்காதவாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் பொதுச் சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதன்படி, இலக்கம் 1875/39 மற்றும் 2014 ஆகஸ்ட் மாதம் 15 ஆந்திகதி பொதுச் சேவையின் மோட்டார் வாகன ஓட்டுனர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளின் படி பயிற்சியளிக்கப்பட்ட பல்நோக்கு அபிவிருத்திச் செயலாற்றுகை உதவியாளர்கள் பொதுச் சேவையின் ஆரம்ப சேவைப்பிரிவின் (PL 03) ஓட்டுநர் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்றனர்

அதற்கிணங்க பலநோக்கு அபிவிருத்தி உதவியாளர் தரம் III இற்கு நியமனம் செய்யப்படுவதற்கான தகைமைகள் மற்றும் இணைந்த சாரதிகள் சேவைப் பிரமாணக் குறிப்பின்,

(அ) 7.2.2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற் தகைமைகள்

(ஆ) 7.2.2.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுபவம்

(இ) 7.2.2.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள உடற்தகைமைகள்

இந்நியமனம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

மேற்படி சேவைப்பிரமாணக் குறிப்பின் இலக்கம். 7.2.4.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, உங்கள் அமைச்சு/ திணைக்களத்தில் நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவர், மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தில் மோட்டார் வாகன பரிசோதிப்பாளர் மற்றும் . காவல்துறை வாகனப் பிரிவின் உத்தியோகத்தர் ஒருவரைக் கொண்ட தொழில்சார் பரிசோதனைக் குழுவொன்றின் மூலம் மற்றும் இலக்கம். 7.2.4.3 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஒரு சாதாரண நேர்காணல் குழு மூலம் தேர்ந்தெடுக்கப்படும்

ஓட்டுநர்களாகப் பயிற்சி பெறுகின்ற பல்நோக்கு அபிவிருத்திச் செயலாற்றுகை உதவியாளர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதைப் பரீட்சிக்க வேண்டும்.

V. மேற்குறித்த தகைமைகளை எல்லா வகையிலும் பூர்த்தி செய்துள்ள நிரந்தர நியமனத் திகதியிலும் பயிற்சியில் ஈடுபட்டுள்ள பலநோக்கு அபிவிருத்திப் பணி உதவியாளர்களுக்கு மாத்திரமே நிறுவனத் தலைவர்களால் சாரதிகள் சேவைக்கான தற்காலிக நியமனக் கடிதங்கள் வழங்கப்பட வேண்டும். தற்காலிக நியமனக் கடிதத்திற்கான மாதிரிப் படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பு 01).

ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் தனித் தனியான கோவைகளைத் தயாரித்து முறையான நியமனம் வழங்குவதற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தையும் (இணைப்பு 02) பூர்த்தி செய்து இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டும். கோவைகளைத் தயாரிக்கும் போது இணைப்பு 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் "உண்மைப் பிரதிகள்" என்று உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

<u>குறிப்பு</u>

**45 வயதுக்கு மேற்பட்டவர்கள் தொடர்பான செயற்பாடுகள் அரச சேவை ஆணைக்குழுவில் விசாரித்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனால், அது தொடர்பில் தனித் தனியாக கோரிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.**

02. இணைந்த சாரதிகள் சேவைக்கான விருப்பத்துக்குரிய சேவை நிலையங்களாகக் கருதப்படும் சேவை நிலையங்களுக்கு இதன் கீழ் ஆட்சேர்ப்புக்கள் செய்யப்படக் கூடாது.

03. மேற்குறித்த விதத்தில் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத பயிற்சிபெற்ற பலநோக்கு அபிவிருத்திப் பணி உதவியாளர்களுக்கு முறையான நியமனங்களை வழங்க முடியாது என்பதனால், தற்காலிக நியமனங்கள் வழங்கும் போது குறித்த தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக நீங்கள் தனிப்பட்ட முறையில் திருப்தியடையவது அவசியமாகும்.

04. இணைந்த சாரதிகள்சேவையின் பதவிகளுக்கு நியமனம்செய்ய நியமிக்கப்பட்டுள்ள இந்த பல்நோக்கு அபிவிருத்திசெயலாற்றுகை உதவியாளர்கள் அரச்சேவையின் வரையறுக்கப்பட்ட துறை அல்லது திறமைத் துறையின் கீழ் பதவியுயர்வு பெறுவதற்காக பொதுச்சேவையில் உள்ள மோட்டார் வாகன ஓட்டுநர்களுக்கு இணைந்த ஓட்டுநர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள க.பொ.த (சாதாரண தரம்) சித்தியடைந்திருத்தல் உள்ளிட்ட

அனைத்து கல்வித் தகைமைகள் மற்றும் பிற தகைமைகளை பூர்த்தி செய்வது கட்டாயமாகும் என்பதோடு அவ்வாறு செய்யாத பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றுகை உதவியாளர்கள் ஒரு போதும் எந்தவொரு ஆட்சேர்ப்புத் துறையின் கீழும் PL மட்டத்தில் உயர் பதவிகளுக்கு விண்ணப்பிக்க தகைமைபெற மாட்டார்கள் என்பதை அவர்களுக்கு அறிவிக்கவே ண்டும்.

05. பயிற்சியில் இருக்கும் பல்நோக்கு அபிவிருத்திசெயலாற்றுகை உதவியாளர்களுக்கு (V) இன் படி தற்காலிக நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டு ஒரு (01) மாதம் காலாவதியாகும் முன் முறையான நியமனக் கடிதங்களை வழங்குவதற்காக உரிய ஆவணங்கள் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பம்./ **எஸ். ஆலோகபண்டார**
இணைந்த சேவை பணிப்பாளர் நாயகம்

தொலைபேசி : 011-2694560
தொலைநகல் : 011-2690100
மின்னஞ்சல் முகவரி : oes.pubad@gmail.com

பிரதி : பணிப்பாளர் நாயகம், பலநோக்கு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்

**தற்காலிக நியமனக் கடிதம்** இணைப்பு 01

எனது இலக்கம்:

............................ அமைச்சு/திணைக்களம்

கொழும்பு.

2023. ஆம் திகதி.

..............................................................ஊடாக,

திரு.............................................................. அவர்களுக்கு

தே.அ.இலக்கம் :- ..........................................................................................

<u>இணைந்த சாரதிகள் சேவையின் தரம் III இலுள்ள ஒரு பதவிக்கு நியமித்தல்</u>

அவி/23/0160/605/012 ஆம் இலக்க 2023.02.07 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் PSC/EST/03-01-01/01/2022 ஆம் இலக்க 2023.09.27 ஆம் திகதிய அரச சேவை ஆணைக்குழுவின்அனுமதிக்கு இணங்க ............ ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் உங்களை இணைந்த சாரதிகள் சேவையின் தரம் III இன் பதவிக்கு நியமனம் செய்கிறேன்.

02. இது ஒரு தற்காலிக நியமனக் கடிதமாகும் என்பதுடன், உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் முறையான நியமனக் கடிதமொன்று இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்தினால் உரிய காலத்தில் வழங்கப்படும். அவ்வாறில்லாதவிடத்து, இந்த நியமனத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

03. தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களக் கட்டளைகளுக்கும் காலத்துக் காலம் அரசாங்கத்தினால் வெளியிடப்படும் ஏனைய ஒழுங்குவதிகளுக்கும் கட்டளைகளுக்கும நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

04. இந்தப் பதவிக்கு உரித்துடைய சம்பளத் திட்டம் ரூபா. 25,790 - 10 X 270 - 10 X 300 - 10 X 330 - 12 X 350 – 38,990/= ஆகும். 2016.02.25 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும். நியமனத் திகதியிலிருந்து மூன்று வருட காலப் பகுதிக்குள் இணைந்த சாரதிகள் சேவையின் தரம் III இற்குரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் நீங்கள் சித்தியடைதல் வேண்டும்.

05. **முதல் நியமனம் வழங்கப்படும் சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது 03 வருடங்கள் கட்டாயம் பணியாற்றுதல் வேண்டும்.** எவ்வாறாயினும், நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விசேட காரணங்களுக்காக அந்தக் காலப் பகுதி முடிவடைவதற்கு முன்னர் எவரேனும் ஒரு உத்தியோகத்தரை இடமாற்றம் செய்யத் தேவைப்படுமாயின், அவ்வாறு செய்வதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உள்ளது.

06. இந்தக் கடிதம் கிடைத்தமை பற்றியும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் நீங்கள் இப்பதவியை ஏற்றுக்கொள்கிறீர்களா என்பதையும் இரண்டு வாரங்களுக்குள் எனக்கு அறிவிக்க வேண்டும். நியாயமான காரணம் எதுவுமின்றி மேலே குறிப்பிட்டவாறு கடமைக்குச் சமுகமளிக்கத் தவறுவீர்களாயின், இந்நியமனம் இரத்தாகிவிடும்.

...........................................................

அமைச்சின்/திணைக்களத் தலைவரின்

கையொப்பம்

முத்திரை:-

பிரதி:- இணைந்த சேவை பணிப்பாளர் நாயகம்

**பலநோக்கு அபிவிருத்திச் செயலாற்றுகைச் செயலணித் திணைக்களத்தின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட சாரதிகளாகச் சேவையாற்றும் பலநோக்கு அபிவிருத்தி உதவியாளர்களுக்கு அவி/23/0160/605/012 ஆம் இலக்க 2023.02.07 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க இணைந்த சாரதிகள் சேவையில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு தகவல்களைப் பெறுதல்**

01. பெயர் :
.................................................................................................................................................

02. தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ☐

03. ஊழியர் அவர்கள், பலநோக்கு அபிவிருத்திச் செயலாற்றுகைப் படையணித் திணைக்களத்தின் கீழ் ☐
பலநோக்கு அபிவிருத்தி உதவியாளர்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட கடிதத்தின் சான்றுப்படுத்தப்பட்ட
பிரதி
நியமனத் திகதி [Y Y Y Y / M M / D D] மற்றும் பதவி.......................................

04. NVQ 3 பயிற்சி பூரணப்படுத்தப்பட்டுள்ளதா? ஆம் ☐
இல்லை ☐

05. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும்
சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளதா? ஆம்
இல்லை

( தனியார்/வாடகை வாகனம் மற்றும் தார் பார ஹோண்டர 24 க்குக் குறைவான ஸ்டேஷன் வெகன் வாகனங்களை ஓட்டுதல்தொடர்பானமோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட, இணைத்துக்கொள்ளப்படும் திகதிக்கு 03 வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டமோட்டார் வாகன செலுத்துகை வாகன அனுமதிச்சீட்டு) ☐ ☐

பழைய ( C அல்லது C1 வகுப்பின் )/ புதிய (B வகுப்பின்)

06. வாகன ஓட்டுனராக 03 வருட கால அனுபவம் இருக்கின்றதா? ஆம்
இல்லை
( சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் ) ☐ ☐

07. நிரந்தர நியமனம் வழங்க உத்தேசித்துள்ள திகதியில் வயது 45 வருடங்களுக்கு மேற்பட்டதாக இல்லை என்பது? ஆம் இல்லை ☐ ☐

08. சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.2.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள உடற்தகைமைகள் மற்றும் 7.2.2.5 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆம் இல்லை
ஏனைய தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா?

09. பிறப்புச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி

பிறந்த திகதி ..................தேசிய அடையாள அட்டை.இ

நிரந்தரப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் சந்தர்ப்பத்தில் ............................... இல் உள்ளவாறான வயது .............................

10. கல்விச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள்
உள்ளன இல்லை

11. மாணவர் செயலாற்றுகைக்கு இணங்க :தரம் 8/ஆண்டு 9 சித்தியடைந்துள்ளாரா?
ஆம் இல்லை
சித்தியடைந்த பாடசாலை :- ...................................................................................

12. சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களில் பெயரில் வித்தியாசங்கள் உள்ளனவாயின் அதற்கான
ஆம் இல்லை
சத்தியக்கடதாசி(இணைக்கப்பட்டுள்ளது)

13. இந்த ஆட்சேர்ப்பு 2022.12.31 இல் உள்ளவாறான அனுமதிக்கப்பட்ட பதவியணி வரயறைக்கு உட்பட்டதா? ஆம் இல்லை

14. ஆட்சேர்ப்புக்கு, அரசாங்க சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறையை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவால்
அனுமதி வழங்கப்பட்டுள்ளதா? ஆம் இல்லை

அவி/23/0160/605/012 ஆம் இலக்க 2023.02.07 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் PSC/EST/03-01-01/01/2022 ஆம் இலக்க 2023.04.10 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்கு இணங்க தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார்/ செய்யவில்லை என்று தனிப்பட்ட முறையில் பரீட்சித்து திருப்தியடைவதால்................................. ஆம் திகதி இணைந்த சாரதிகள் சேவையின் பதவியொன்றுக்கு நியமிப்பதற்கு பரிந்துரைக்கிறேன்/ பரிந்துரைக்கவில்லை.

..........................................................

திணைக்களத் தலைவரின் சிபாரிசு

..........................................................

அமைச்சின் செயலாளரின் சிபாரிசு

**<u>பலநோக்கு அபிவிருத்திச் செயலாற்றுகைச் செயலணித் திணைக்களத்தின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட சாரதிகளாகச் சேவையாற்றும் பலநோக்கு அபிவிருத்தி உதவியாளர்களுக்கு அவி/23/0160/605/012 ஆம் இலக்க 2023.02.07 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க இணைந்த சாரதிகள் சேவையில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு தகவல்களைப் பெறுதல்</u>**

1. பதிவாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழின் திணைக்களத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி

2. தேசிய அடையாள அட்டையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி
3. மாணவர் செயலாற்றுகை அறிக்கையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி
4. க.பொ.த. (சா/த) பெறுபேற்றின் திணைக்களத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி (தோற்றியிருந்தால் மாத்திரம்)
5. பலநோக்கு அபிவிருத்திச் செயலாற்றுகைச் செயலணித் திணைக்களத்தின் பலநோக்கு அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்த கடிதத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி
6. பலநோக்கு அபிவிருத்திச் செயலாற்றுகைச் செயலணித் திணைக்களத்தினால் அல்லது பயிற்சிபெற்ற திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பலநோக்கு அபிவிருத்தி உதவியாளர் பதவியில் ஆகக் குறைந்தது 06 மாதங்கள் தொடர்ச்சியாகவும் முறையாகவும் பயிற்சியைப் பூர்த்தி செய்ததற்கான சான்றிதழ்
7. NVQ 3 பயிற்சியைப் பூர்த்தி செய்ததற்கான சான்றிதழ்
8. தனியார்/வாடகை வாகனம் மற்றும் தார் பார ஹோண்டர 24 க்குக் குறைவான ஸ்டேஷன் வெகன் வாகனங்களை ஓட்டுதல் தொடர்பானமோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட, இணைத்துக்கொள்ளப்படும் திகதிக்கு 03 வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டமோட்டார் வாகன செலுத்துகை வாகன அனுமதிச்சீட்டு)

   பழைய C அல்லது C1 வகுப்பின் / புதிய B வகுப்பின் அனுமதிச்சீட்டின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி
9. சாதாரண கண் பார்வை, இரவுநேர கண் பார்வை மற்றும் வர்ணப் பார்வை குறித்து அரசு மருத்துவ உத்தியோகத்தரொருவரால் வழங்கப்பட்ட முறையான சான்றிதழ் (சுகாதாரம் 307)
10. வாகனச் சாரதியாக 03 வருட அனுபவமிருப்பதை உறுதிப்படுத்துவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள்.
11. சமர்ப்பிக்கும் சான்றிதழ்களில் பெயரில் வித்தியாசங்கள் இருப்பின் அதற்கான சத்தியக்கடதாசியொன்று.

12. நேர்முகப் பரீட்சைச் சபையின் அறிக்கையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி

13. உங்களால் வழங்கப்பட்ட தற்காலிக நியமனக் கடிதத்தின் இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்திற்கான பிரதி

14. மேற்குறித்த தற்காலிக நியமனத்திற்கு (இணைப்பு 01) உத்தியோகத்தர் பதவியைப் பொறுப்பேற்றதற்கான கடிதம் (5 ஆம் பிற்சேர்க்கையின் பிரகாரம்)

15. ஆட்சேர்ப்பு, 2022.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான அனுமதிக்கப்பட்ட பதவியணி வரையறைக்குள் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பதவிக்கு அனுமதியளிக்கும் கடிதத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி

16. அரசாங்க சேவையின் ஆட்சேர்ப்புச் செயன்முறையை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவினால்/ முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தினால் (2023.06.30 ஆம் திகதியின் பின்னர்) உங்கள் அமைச்சின்/திணைக்களத்தின் பதவி வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அனுமதி வழங்கிய கடிதத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி

17. திணைக்களத் தலைவரின் சிபாரிசு

18. அமைச்சின் செயலாளரின் சிபாரிசு

**குறிப்பு:- சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் அனைத்தும் "உண்மைப் பிரதிகள்" என்று திணைக்களத் தலைவரின் ஊடாகச் சான்றுப்படுத்திச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.**